**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.**
**பத்திரிக்கைச் செய்தி**

**பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் மாணவ, மாணவிகளுக்கான சைக்கிள் போட்டியினைதிருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., துவக்கி வைத்தல்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவின் சார்பில் மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 109 வது நினைவாக, அண்ணா விரைவு சைக்கிள் போட்டிகள் **15.09.2017** (வெள்ளிக்கிழமை) காலை 7.00 மணிக்கு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டியை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் **உயர்திரு.சந்தீப்நந்தூரி இ.ஆ.ப., அவர்கள்** துவக்கி வைக்க இசைந்துள்ளார்கள். பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் **மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் சக்திகுமார் இ.கா.ப.,** வழங்கிட இசைந்துள்ளார்கள்.
**அண்ணா விரைவு சைக்கிள் போட்டிகள்** 13வயது ,(01.01.2004 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராக இருத்தல் வேண்டும்) , 15 வயது பிரிவு ((01.01.2002 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராக இருத்தல் வேண்டும்), மற்றும் 17வயது பிரிவு (01.01.2000 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராக இருத்தல் வேண்டும்) ( மாணவர்கள் 15 கி.மீ , 20 கி.மீ மாணவிகள் 10 கி.மீ , 15 கி.மீ ஆகிய பிரிவுகளக்கு தூர போட்டிகள் நடைபெறவுள்ளது. அண்ணா விரைவு சைக்கிள் போட்டியானது, பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கிலிருந்து துவங்கி, மாநகர ஆணையர் பங்களா, DIG பங்களா வழியாக திருச்செந்தூர் ரோடு V.M.சத்திரம் புவிஈர்ப்பு மையம் வழியாக சென்று அதே பாதையில் மீண்டும் அண்ணா விளையாட்டரங்கம் வந்து அடையும். அண்ணா விரைவு சைக்கிள் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு பதக்கங்களும் , முதல் 10 இடங்களை பெறுபவர்களுக்கு தகுதிச் சான்றிதழ்களும் மட்டும் வழங்கப்படும.

மேலும் அதனை தொடர்ந்து அன்று காலை 9.30 **மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டு போட்டிகள் அண்ணா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டியானது** இளநிலை பிரிவு (மழலை வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை ) மற்றும் முதுநிலைப்பிரிவு (6-ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை ) என இரு பிரிவுகளாக போட்டிகள் நடைபெறும் இளநிலை பிரிவு முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு முதல் பரிசு ரூ.500/-, 250/-, 125/-ம் முதுநிலை பிரிவினருக்கு 1000/-,500/-,250/-பரிசு தொகை வழங்கப்படுகிறது. பரிசுத் தொகையானது D.B.T (Direct Benefit Transfer) முறையில் வெற்றி பெறுபவர்களுக்கு அனுப்பிட இதன் மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது. கேரம் விளையாட்டில் பங்கு பெறுபவர்கள் தங்களுடைய வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் போட்டியின்போது கொண்டு வருதல் வேண்டும். மேற்கண்ட தகவலை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்கள். மேலும் விவரங்களுக்கு 0462-2572632 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

ஓம்/-
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.